**சார்பு நீதிமன்றம், மேலூர்**
நாள் *:19.09.2024*
வா.சா.*1* -கெங்கையம்மாள்
*O.S No.120/2022 :*
*(*சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.*)*
அரசு தரப்பில் குறுக்கு விசாரணை *:*

நான் என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்து தெரிந்து கொண்டு தான் கைரேகை வைத்தேன். பிராதில் உள்ள விபரங்களும் எனக்கு தெரியும். வழக்கு சொத்தை வாங்குவதற்கு முன்பாக அதற்குரிய வில்லங்கத்தை சரிபார்த்து தான் கிரையம் பெற்றேன். நான் யாரிடம் இருந்து வழக்கு சொத்தை கிரையம் பெற்றேன் என்று நினைவில்லை. நான் யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்ற விபரத்தை அவர் எந்த ஊரை சார்ந்தவர் என்ற விபரத்தையும், அவருடைய தகப்பனார் பெயர், மற்றும் முகவரியையும் குறிப்பிட்டு பிராதிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

*(*வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது*)*

*sd./M.Samundeeswari Prabha*
*Sub Judge*
*Melur*